<u>சுருக்கம்</u>

செய்தி மக்கள் தொடர்பத் துறை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2018–2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவித்த அறிவிப்பு – செயலாக்கம் செய்ய தமிழ்நாட்டில் ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.2,00,000/–லிருந்து ரூ.3,00,000/–ஆக உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை</u>

அரசாணை (நிலை) எண் 122 — நாள் 30.07.2018

திருவள்ளுவர் ஆண்டு 2049

விளம்பி வருடம் ஆடி 14– ம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.147 செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த் துறை, நாள் 03.04.1986.
2. அரசாணை (நிலை) எண்.489, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 06.11.1986.
3. அரசாணை (நிலை) எண்.91, செய்தி மற்றும் சுற்றுலா(செ.வெ)த் துறை, நாள் 2.3.1989.
4. அரசாணை (நிலை) எண்.94, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 30.03.1992.
5. அரசாணை (நிலை) எண்.139, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 01.08.1996.
6. அரசாணை (நிலை) எண்.98, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 17.4.1997.
7. அரசாணை (நிலை) எண்.84, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 28.4.1999.
8. அரசாணை (நிலை) எண்.79, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள்11.4.2000
9. அரசாணை (நிலை) எண்.151, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 13.07.2000.
10. அரசாணை (நிலை) எண்.303, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 22.07.2010
11. அரசாணை (நிலை) எண்.133, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(நிர்.4)த்துறை, நாள் 24.05.2012.
12. தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள் 29.06.2018.

------

**ஆணை :**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வு பெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க பல்வேறு விதிகள் வகுக்கப்பட்டு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.04.1986 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

த.பி.பா.,